மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.
முன்னிலை :- திரு S.சோமசுந்தரம், எம்.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2048 ஹேவிளம்பி வருடம் கார்த்திகைத் திங்கள் 14ஆம் நாள்

**அசல் வழக்கு எண்.06/2017**

1. ராம ராதாகிருஷ்ணன்
2. சுஜீதா
3. கணேஷ் பிரகாஷ் .... வாதிகள்

//எதிர்//

1. வீரம்மாள்
2. சார்பதிவாளர், மன்னார்குடி.
3. மாவட்ட ஆட்சியர், திருவாரூர் மாவட்டம். ..பிரதிவாதிகள்

இவ்வழக்கு 29.11.2017 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V. K. சண்முகா அவர்களும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. உதயகுமார் அவர்கள் ஆஜராகி வா.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், வழக்கறிஞர் தமக்கு தகவல் ஏதும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரிலும், 1ம் பிரதிவாதி அழைக்கப்பட்டு வருகையில்லாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், 2,3 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.R. பிரகலாதன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்பு ரை :-**

1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் 25.06.2016ம் தேதியன்று ஏற்படுத்திய செட்டில்மெண்ட் ரத்து ஆவண எண். 2741/2016 இல்லா நிலையது என்று உரிமை விளம்பல் பரிகாரம் கோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதிகளின் வழக்குரையின் சுருக்கம்**

தாவா சொத்தானது 1ம் பிரதிவாதி தந்தையான ரத்தினசாமி நெல்லிப்பிரியருக்கு சொந்தமாக இருந்து வந்து அவர் இறப்பிற்கு பின் அவரது ஒரே மகளும், இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியான வீரம்மாளுக்கு கிடைக்கப்பெற்றது. 1ம் பிரதிவாதிக்கு 3 ஆண் வாரிசுகள் மற்றும் 2 பெண் வாரிசுகள் ஆவார்கள். வழக்கு சொத்தை 1ம் வாதிக்கு 23.03.2016ம் தேதியன்று செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார். 1ம் வாதி அந்த சொத்துக்களை 27.05.2016ம் தேதியன்று 2,3 வாதிகளுக்கு எழுதி ஒப்படைத்து விட்டார். ஆனால், 1ம் பிரதிவாதி அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை 25.06.2016ம் தேதியன்று ரத்து செய்துவிட்டார். எனவே, 1ம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட 25.06.2016-ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ரத்து ஆவணமானது இல்லா நிலையது என்று விளம்புகை கோரியும் மற்றும் வாதிகளின் செலவுத்தொகை கோரியும் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**3. 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்குரையில் கண்டுள்ள விவரங்களை பிரதிவாதி மறுக்கிறார். வாதிகள் மூவரும் தனித்தனியாக இனாம் செட்டில்மெண்ட் எழுதி பெற்றுள்ளதாக கூறப்படும் நிலையில் ரத்து செய்யப்பட்ட ஆவணமானது தனித்தனியாக ஆவண எண்கள். 2740/2016, 2741/2016, 2742/2016,2743/2016 மற்றும் 2744/2016 என ஐந்து ஆவணங்கள் மூலம் ரத்து செய்யப்பட்டுள்ள நிலையில் வாதிகள் இனாம் செட்டில்மெண்டை ரத்து செய்தது செல்லாது என கோரியிருப்பது சரியானதல்ல. வழக்கு சொத்தின் உண்மையான உரிமையாளரான 1ம் பிரதிவாதி பூர்வீக சொந்தமான சொத்தை பொறுத்து தனிப்பட்ட முறையில் இனாம் செட்டில்மெண்ட் எழுதிவைக்க 1ம் பிரதிவாதிக்கு எந்தவித உரிமையும் கிடையாது. 1ம் பிரதிவாதிக்கு 80 வயதுக்கு மேல் ஆகிவிட்ட நிலையில், 1ம் பிரதிவாதியின் சிந்தனைத்திறனை அடக்கி அவரது விருப்பத்திற்கு எதிராக மோசடியாக 1ம் வாதி கடன் வாங்கவேண்டும் என்று ஒரு ஆவணம் எழுதிக்கொடுக்குமாறு_ கேட்டதால், 1ம் பிரதிவாதிக்கு உடன்பிறந்த சகோதரர்கள், சகோதரிகள் உள்ள நிலையில், சொத்து முழுவதும் தானே அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் இனாம் செட்டில்மெண்டை எழுதி வாங்கிவிட்டு 1ம் வாதி தன் பிள்ளைகளான 2,3 வாதிகளுக்கு மறு செட்டில்மெண்ட்எழுதிவைத்துள்ளார். சொத்தின் அசல் பத்திரங்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதியின் வசம் உள்ளது. 1ம் வாதியின் செயல் 1ம் பிரதிவாதிக்கு தெரியவந்ததால், இனாம் செட்டில்மெண்டை ரத்து செய்துவிட்டார். எனவே, எழுதப்பட்ட செட்டில்மெண்டை ரத்து செய்த ஆவணம் சட்டப்படி செல்லுபடியானது ஆகும். 1ம் பிரதிவாதி தன்னிச்சையாக விருப்பப்பட்டு 1ம்

வாதிக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதிவைக்கவில்லை எனவே, இந்த வழக்கை 1ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கோரியுள்ளார்.

**4. 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:- (2ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை 3ம் பிரதிவாதி தனதாக ஏற்றுக்கொள்கிறார்).**

வாதி வழக்கில் பொய்யான சங்கதிகளை சொல்லியுள்ளார். வழக்கு சொத்து வாதிக்கு எவ்வாறு உரிமை உடையது என்ற விவரம் வழக்குரையில் தெரிவிக்கவில்லை. சார் பதிவாளரை பொறுத்தவரையில் உரிமையாளர்கள் தங்களுடைய சொத்தின் உரிமை மூலத்தை மாற்றிக்கொள்ளவோ, அல்லது விற்பனை செய்யவோ அல்லது பாராதீனம் செய்யவோ சொத்தின் உரிமையாளருக்கு முழு உரிமை உண்டு. இந்நிலையில் உரிமையுள்ள சொத்தில் பதிவு கட்டணங்களை சரிபார்த்து ஆவணங்களை பதிவு செய்வது சார்பதிவாளரின் கடமையாக உள்ளது. வாதி பொய்யான தகவலைச்சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் 2,3 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.** இவ்வழக்கில் தீர்வு காணும் பொருட்டு, வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலித்து இந்நீதிமன்றத்தால் 17.08.2017ம் தேதியில் கீழ்க்கண்ட வழக்கெழு வினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. **25.06.2016ம் தேதியில் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் ஏற்படுத்திய ஆவண எண். 2741/16 செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் இல்லா நிலையது என்ற உரிமை விளம்பல் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?**
2. **வாதிக்கு கிடைக்ககூடிய இதர பரிகாரம் என்ன?**

**6.** இவ்வழக்கில் வாதிகள் தரப்பில், வாதி ராமராதாகிருஷ்ணன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 -ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 முடிய சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. 08.12.1935 தேதிய சார்பதிவாளர் அலுவலக கிரய சாசன நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 05.10.1939 தேதிய கிரய சாசனத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 05.10.1950 தேதிய கிரய சாசனத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ.3 ஆகவும்,23.03.2016 தேதிய 1ம் பிரதிவாதி 1ம் வாதியின் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்ததற்கான சார்பதிவாளர் அலுவலக

சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 27.05.2016ம் தேதிய மகளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகவும், மகனுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகவும், 25.06.2016ம் தேதி 1ம் பிரதிவாதி வாதியின் பெயரில் இருந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்து எழுதி வைத்த ஆவணத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ.7 ஆகவும், 30.07.2016ம் தேதிய 1,2 பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் வா.சா.ஆ8 ஆகவும், 02.08.2016ம் தேதிய 1ம் பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.9 ஆகவும், 03.08.2016ம் தேதிய 2வது பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.10 ஆகவும், 1ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7.** இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி அசல் வழக்கில் எதிர்வழக்குரை வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்துள்ளபோதிலும், வா.சா.1-ஐ குறுக்கு விசாரணைக்காக போடப்பட்டிருந்த நிலையில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததாலும், 1ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் தகவல் ஏதும் இல்லை என்று தெரிவித்ததாலும் 1-ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்னிலையாகாததாலும் அவருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பில் சாட்சியம் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியிடப்படவில்லை.

**8.** வாதி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை 1ம் வாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் 23.03.2016- ல் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றும், அன்றைய தினமே, 1ம் வாதி அந்த சொத்தை அனுபவத்தில் எடுத்துக்கொண்டு அதனை 2 ஆக பிரித்து 2,3 வாதிகளுக்கு 27.05.2016-ல் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றும், அதன் பின்னிட்டு 1ம் பிரதிவாதி அவர் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்து 25.06.2016ம் தேதியன்று பதிவு செய்துள்ளார் என்றும், அவ்வாறு ரத்து செய்வதற்கு 1ம் பிரதிவாதிக்கு சட்டப்படி எந்தவித உரிமையும் இல்லை என்றும், எனவே, 1ம் பிரதிவாதி 25.06.2016-ல் எழுதி வைத்துள்ள செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் இல்லா நிலையது என்று அறிவிக்க வேண்டும் என்றும் வாதிட்டார். அவரது வாதத்திற்கு ஆதரவாக மாண்பமை உயர்நீதிமன்றத்தின் 2017(4) Law Weekly 523, என்ற முன் தீர்ப்பினையும் 2017(3) Law Weekly 217 என்ற முன் தீர்ப்பினையும் தாக்கல் செய்தார். 2,3 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. இத்துடன் வாதி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி தரப்பில் சாட்சியம் எதுவும்

முன்னிலைப்படுத்த முன் வரவில்லை. 2,3 பிரதிவாதிகள் தரப்பிலும் சாட்சியம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**9.** 2,3 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் பத்திர பதிவு சட்ட விதிகளுக்கு உட்பட்டு பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் எனவே, வாதியின் இந்த வழக்கானது ஏற்கதக்கதல்ல என்றும் ஆகையால் வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார். இவ்வழக்கில் 2,3 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியிடப்படவில்லை.

**10.** **எழுவினா 1 :-**

இந்த வழக்கில் வாதி தரப்பு வழக்குரை, சாட்சியம், மற்றும் 1ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை, ஆகியவற்றிலிருந்து இவ்வழக்கு சொத்தின் ஆரம்ப கட்ட உரிமையாளர் 1ம் பிரதிவாதி என்று, தெளிவாக அறிய முடிகிறது. 1-ம் வாதிக்கு 1ம் பிரதிவாதி பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின்மூலம் எழுதிவைத்து சொத்தை ஒப்படைத்ததாக சாட்சியமளித்து அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் அதற்குரிய மூல ஆவணங்கள் வா.சா.ஆ.1 முதல் 3 முடிய தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் வாதி செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் அடைந்த சொத்தை அவரது பிள்ளைகளான 2,3 வாதிகளுக்கு 27.05.2016-ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்பதனை வா.சா.ஆ.5, 6 ஆவணங்களின் மூலம் அறிய முடிகிற. இந்நிலையில், வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் ரத்து ஆவணத்தை பரிசீலினை செய்கையில் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்தை சுவாதீனம் எடுத்து கொள்ளாததாலும், பட்டா மாற்றம் செய்யாததாலும் செட்டில் மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ததாக கண்டு எழுதப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு முன்பாகவே இவ்வழக்கின் 1ம் வாதி வழக்கு சொத்துக்களை அவரது மகனுக்கும் மகளுக்கும் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் கொடுத்துவிட்டார் என்பதனை தெளிவாக ஆவணங்களிலிருந்து அறிய முடிகிறது. இந்நிலையில், வா.சா.ஆ.4 , 1ம் பிரதிவாதி எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் வழக்கு சொத்து உள்ளிட்ட சொத்துக்களை இந்த 1ம் வாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்து அனுபவத்தையும் விட்டு விட்டதாக கண்டு எழுதப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் நிபந்தனைகள் ஏதும் விதித்து ஆவணம் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், இந்த 1ம் பிரதிவாதியால் அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்து ஏற்படுத்தியுள்ள ஆவணத்திலும் நிபந்தனைகள் ஏதும் மீறப்பட்டதாக குறிப்பிட்டு எழுதப்படவில்லை.

**11.** 1ம் பிரதிவாதி 1-ம் வாதி பெயரில் ஏற்படுத்திய செட்டில்மெண்ட் ஆவணத்தை வாதிக்கு

தெரியாமலேயே தன்னிச்சையாக ரத்து செய்ய இயலுமா என்று ஆய்வு செய்கையில் இந்திய பதிவு சட்டம் பிரிவு -17-ல் பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் குறித்து வரையரை செய்யப்பட்டுள்ளது. இந்த சட்டப்பிரிவின் கீழ் 1ம் பிரதிவாதி, 1ம் வாதிக்கு எழுதி பதிவு செய்துகொடுத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணததை அந்த 1ம் வாதிக்கு அறிவிப்பு கொடுக்காமலும், அவருக்கு தெரிவிக்காமலும் செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை அறிய முடிகிறது. இவ்வழக்கில் வாதி தரப்பில் தெரிவித்த சங்கதிகள் மற்றும் தாக்கல் செய்த சான்றாவணங்களை முரன்படுத்தும் விதமாக 1ம் பிரதிவாதி தரப்பில் வாதியை குறுக்கு விசாரணை எதுவும் செய்யப்படவில்லை. இந்நிலையில் வாதி தரப்பு வழக்கறிஞர் தாக்கல் செய்த முன் தீர்ப்பை கவனமுடன் ஆய்வு செய்கையில்,

**2017-4-Law Weekly 523**

P.A.G. Kumaran

**//Vs//**

Inspector General of Registration,

Santhome, Chennai & Others

**Registration act, Section 17,**

**held:** unliateral cancellatio of the settlement deed made by the first and second respondents is bad – Court declares that said Deed of Cancellation of settlement illegal.

என்று மேற்கண்ட முன் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2017-3- Law Weekly 217_ என்ற முன் தீர்ப்பினை ஆய்வு செய்கையில் ஒரு ஆவணம் பதிவு செய்யப்பட்டால் அதில் பாதிக்கப்பட்ட நபர் உரிமையியல் நீதிமன்றத்தில் சென்று வழக்கு தான் தாக்கல் செய்ய இயலும் என்ற மாண்பமை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. செட்டில்மெண்ட்டை தன்னிச்சையாக ஒரு தரப்பினரால் ரத்து செய்யப்பட்டது சரியானது அல்ல என்று மாண்பமை உயர் நீதிமன்றம் மேற்கோள் காட்டி தீர்ப்பு வழங்கியுள்ளது.

**2017-3- Law Weekly 217_**

S. Palanisamy

**//Vs//**

The Sub-Registrar, Nallur, and another

Registration Act, Sections 17,18,19, 20,21,22,32,35

second respondent executed Deed of Cancellation of Release without informing petitoner

held: once the document is registered not open to registering office to cancel registration – Aggrieved party can challange registration and validity of document before civil court – Writ petition not proper remedy.

எனவே மேற்கண்ட முன் தீர்ப்புகளின் அடிப்படையிலும், பதிவு சட்டப்படியும் 1ம் பிரதிவாதி அவராக தன்னிச்சையாக 1ம் வாதிக்கு தெரியாமல் செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் ஏற்படுத்த இயலாது. எனவே, இவ்வழக்கு பொருண்மைகளிலிருந்து 1ம் பிரதிவாதி எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி ஒரு இல்லா நிலை ஆவணம் என்று எழுவினா 1-க்கு இந்நீதிமன்றம் தீர்வுக் காண்கிறது.

**12. எழுவினா 2 :-**

வழக்கின் தன்மையை கருத்திற்கொண்டு பார்க்கையில் வாதிகளுக்கு ஏற்பட்ட செலவுத்தொகைகளை 1ம் பிரதிவாதி செலுத்தவேண்டும் என்ற உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்தானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,** வழக்கானது செலவுத்தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1ம் பிரதிவாதி 25.06.2016ம் தேதியன்று 2ம் பிரதிவாதியான மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்படுத்தி பதிவு செய்த செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் எண். 2741/2016 ஆவணம் இல்லாநிலையது என்று விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. வாதிகளுக்குண்டான செலவுத்தொகையை 1ம் பிரதிவாதி செலுத்திவைக்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் குறிப்பெடுக்கப்பட்டு, விரிவாக்கம்

செய்யப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 30.11.2017) அவையறிய பகரப்பட்டது.

( Sd/-S. Somasundaram)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி

**பின் இணைப்பு :-**

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் :-**

**வாதிகள் தரப்பில் :-**

1. வா.சா.1 ராமராதாகிருஷ்ணன்(1ம் வாதி)

**பிரதிவாதிகள் தரப்பில் :-** **இல்லை**

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் :-**

| | | | |
|---|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | 08.12.1935 | சார்பதிவாளர் அலுவலக கிரய சாசன நகல் |
| 2 | வா..சா.ஆ.2 | 05.10.1939 | கிரய சாசனத்தின் சார்பதிவக நகல் |
| 3 | வா.சா.ஆ.3 | 05.10.1950 | கிரய சாசன சார்பதிவக நகல் |
| 4 | வா.சா.ஆ.4 | 23.03.2016 | 1ம் பிரதிவாதி 1ம் வாதியின் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்ததற்கான சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் |
| 5 | வா.சா.ஆ.5 | 27.05.2016 | 1-ம் வாதி அவரது மகளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் |
| 6 | வா.சா.ஆ.6 | 27.05.2016 | 1ம் வாதி அவரது மகனுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல். |
| 7 | வா.சா.ஆ.7 | 25.06.2016 | வாதியின் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை 1-ம் பிரதிவாதி ரத்து செய்து எழுதி வைத்த ஆவணத்தின் சார்பதிவக நகல் |
| 8 | வா.சா.ஆ.8 | 30.07.2016 | 1,2 பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் |

| | | | |
|---|---|---|---|
| 9 | வா.சா.ஆ.9 | 02.08.2016 | 1ம் பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை |
| 10 | வா.சா.ஆ.10 | 03.08.2016 | 2வது பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை |
| 11 | வா.சா.ஆ.11 | ---- | 1ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு |

**பிரதிவாதிகள் தரப்பில் :-** இல்லை

( Sd/-S. Somasundaram)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி